Date: **August 06,2025**

**To,**

**National Stock Exchange of India Limited**
**Exchange Plaza, C-1, Block G**
**Bandra Kurla Complex**
**Bandra (E), Mumbai – 400 051**

**BSE Limited**
**Phiroze Jeejeebhoy Towers**
**Dalal Street, Mumbai – 400 001**

**SYMBOL: HYUNDAI**

**SCRIP CODE: 544274**

Dear Sir/Ma'am

**Sub: Newspaper Advertisement – Disclosure under Regulation 30 and 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("SEBI LODR")**

Pursuant to Regulation 30 and 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("SEBI LODR") and in compliance with Section 108 of the Companies Act, 2013 read with Rule 20 of the Companies (Management and Administration) Rules,2014 and the Secretarial Standards of General Meetings issued by the Institute of Company Secretaries of India, we are enclosing herewith copies of the newspaper advertisement published in today's newspapers, viz., The Financial Express (English edition) and Dinamalar (Tamil edition) for giving information pertaining to the 29th Annual General Meeting of Hyundai Motor India Limited ("the Company") to be held through Video Conferencing on Thursday, August 28, 2025 at 2:00 p.m. (IST).

The above information is also available on the Company's website at https://www.hyundai.com/in/en/investor-relations/investor-information/disclosure/newspaper-advertisement

Kindly take this on record

Thanking you,
For **Hyundai Motor India Limited**

Pradeep Chugh

Digitally signed by Pradeep Chugh
DN: cn=Pradeep Chugh, email=276223@hmil.net, c=IN
Date: 2025.08.06 16:07:01 +05'30'

**Pradeep Chugh**
**Company Secretary & Compliance Officer**

*Encl: As above*

# போலீஸ் தெரிவித்த தேதியில் மதுரையில் த.வெ.க., மாநாடு

**சென்னை, ஆக. 6–**

'போலீசார் குறித்து கொடுத்த தேதியில், மதுரையில் மாநாடு நடத்தப்படும்' என, த.வெ.க., தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை:

கட்சியின் இரண்டாவது மாநில மாநாடு, வரும் 25ம் தேதி மதுரையில் நடக்கும் என, ஏற்கனவே அறிவித்திருந்தேன். மாநாடு முடிந்த ஒருநாள் இடைவெளியில், விநாயகர் சதுர்த்தி விழா வருவதால், காவல் துறை அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதோடு, அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபட வேண்டி உள்ளது.



விஜய்

எனவே, மாநாட்டிற்கு முழுமையான பாதுகாப்பு வழங்குவதற்கு ஏதுவாக, வரும் 18 முதல் 22ம் தேதி வரை, ஏதேனும் ஒரு தேதியில் மாநாட்டை நடத்தும்படி, காவல் துறை கேட்டுக் கொண்டுள்ளது. அதன்படி, கட்சியின் மாநில மாநாடு முன்கூட்டியே நடத்தப்பட உள்ளது. வரும் 21ம் தேதி மாலை 4:00 மணிக்கு, ஏற்கனவே அறிவித்த அதே மதுரை மாநகரில், அதே பிரமாண்டத்தோடும், கூடுதல் உற்சாகத்தோடும் மாநாடு மிகச் சிறப்பாக நடத்தப்பட உள்ளது.

இதற்கான பணிகள், ஏற்கனவே சிறப்பான முறையில் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. தற்போது, பணிகள் மேலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, கட்சி நிர்வாகிகள், 21ம் தேதி மதுரையில் நடக்கவுள்ள மாநில மாநாட்டிற்கு மிகவும் பொறுப்புடனும், பாதுகாப்புடனும் வந்து கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு விஜய் கூறியுள்ளார்.

# செந்தில் பாலாஜி தம்பிக்கான நிபந்தனைகள் என்னென்ன?

## அமலாக்கத்துறை தெரிவிக்க உத்தரவு

**சென்னை, ஆக. 6–**

அமெரிக்காவில் சிகிச்சை மேற்கொள்வதற்காக செல்ல, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் தம்பி அசோக்குமாருக்கு அனுமதி அளித்தால், அவருக்கு என்னென்ன நிபந்தனைகள் விதிக்கலாம் என்பது குறித்து, அமலாக்கத்துறை பதில் அளிக்க, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்டத்தின் கீழ், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது தம்பி அசோக்குமார், செந்தில் பாலாஜி முன்னாள் உதவியாளர் சண்முகம் உட்பட, 13 பேருக்கு எதிராக, அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கு விசாரணை, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இதய அறுவை சிகிச்சை செய்து கொள்ள, அமெரிக்கா செல்ல அனுமதி கோரி, அசோக்குமார் தாக்கல் செய்த மனுவை, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் அசோக்குமார் தரப்பில், மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனு, நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வு முன், நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, அசோக்குமார் தரப்பில், மூத்த வழக்கறிஞர் ஜான் சத்யன் ஆஜராகி, அமெரிக்காவில் சிகிச்சை பெறவுள்ள தேதி உள்ளிட்ட விபரங்களை தாக்கல் செய்தார்.

அமலாக்கத்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 'வெளிநாடு செல்ல மனுதாரரை அனுமதித்தால், அவரது மனைவியின் பாஸ்போர்ட்டை ஒப்படைப்பது உள்ளிட்ட நிபந்தனைகளை விதிக்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டது.

அப்போது, 'அசோக்குமாருடன் அவரது மனைவியும், அமெரிக்கா செல்ல உள்ளதால், அவரது பாஸ்போர்ட்டை ஒப்படைக்க இயலாது. மாறாக, அவரது மகளின் பாஸ்போர்ட்டை ஒப்படைக்க தயாராக உள்ளோம்' என, அசோக்குமார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், அசோக்குமாரை அமெரிக்கா செல்ல அனுமதிக்கும்பட்சத்தில், அவருக்கு என்னென்ன நிபந்தனைகளை விதிக்கலாம் என்பது குறித்து, அமலாக்கத்துறை பதில் அளிக்க உத்தரவிட்டனர்.

# இணையதளத்தில் பெண் வக்கீல் வீடியோ 'ஐகோர்ட்' வேதனை

**சென்னை, ஆக. 6–**

''ராமாயணத்தில் ராவணனின் தலை, ஒவ்வொரு முறை வெட்டப்படும் போது, மீண்டும், மீண்டும் முளைப்பது போல, பாதிக்கப்பட்ட பெண் வழக்கறிஞரின் வீடியோக்கள், இணையதளங்களில் உலாவருவது வேதனை அளிக்கிறது,'' என, சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்து உள்ளது.



பெண் வழக்கறிஞர், தன் கல்லுாரி காலத்தில், ஆண் நண்பருடன் நெருக்கமாக இருந்த வீடியோக்கள், புகைப்படங்கள் இணையதளங்களில் பரப்பப்பட்டன.

அவற்றை நீக்க, உரிய நடவடிக்கை எடுக்க கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில், பெண் வழக்கறிஞர் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு, நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன், நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் மூத்த வழக்கறிஞர் அபுடுகுமார் ராஜரத்தினம் ஆஜராகி, ''பாதிக்கப்பட்ட பெண் வழக்கறிஞரின் வீடியோ மற்றும் புகைப்படங்கள், மேலும் 13 இணையதளங்களில் பரவி உள்ளது. அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றார்.

மத்திய அரசு தரப்பில் வழக்கறிஞர் ஏ.குமரகுரு ஆஜராகி, ''மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், இப்பிரச்னையை கையாள ஒரு குழு அமைத்துள்ளது. பாதிக்கப்பட்ட நபரின் வீடியோ உலாவும் தளங்கள் தடுக்கப்பட்டு, மீண்டும் அவை வராமல் இருப்பதை குழு உறுதி செய்யும்.

இது தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு காண, நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து வருவதால், விசாரணையை தள்ளி வைக்க வேண்டும்,'' என்றார்.

இதையடுத்து நீதிபதி, ''ராமாயணத்தில் ராவணனின் தலை, ஒவ்வொரு முறை வெட்டப்படும் போதும், மீண்டும், மீண்டும் முளைப்பது போல், பாதிக்கப்பட்ட பெண்ணின் வீடியோக்கள், மீண்டும் மீண்டும் இணையத்தில் உலாவருவது கவலை அளிக்கிறது.

'ஆப்பரேஷன் சிந்துார்' நடவடிக்கையின் போது, சட்ட விரோத இணைய தளங்களை முடக்கியது போல், தனி ஒருவருக்காக இந்த இணையதளங்களையும் முடக்க, மத்திய அரசு அமைத்துள்ள குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என உத்தரவிட்டு, விசாரணையை வரும் 19ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

# செஞ்சி கோட்டை மீட்பு போராட்டம்: சீமான்

**சென்னை, ஆக. 6–**

நா.த.க., தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிக்கை:

தமிழ் மன்னர் கோனேரிக்கோன் கட்டிய செஞ்சி கோட்டையை, மராட்டிய மன்னர் சிவாஜியின், 12 கோட்டைகளில் ஒன்றாக, யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த வரலாற்று திரிபை தடுத்து நிறுத்தி, தமிழ் மன்னர் கோட்டையாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தி, வரும் 17ம் தேதி விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் போராட்டம் நடத்தப்படும்.

நெசவாளர்கள் வாழ்வுரிமை பாதுகாப்பு பொதுக்கூட்டம், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில், நாளை நடக்க உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# போலீசாரை விசாரிக்க சி.பி.ஐ.,க்கு அனுமதி

**மதுரை, ஆக. 6–**

சிவகங்கை மாவட்டம், மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவிலுக்கு வந்த பேராசிரியை நிகிதாவின் காரிலிருந்த நகை திருடு போனது. கோவில் காவலாளி அஜித்குமாரை ஜூன் 27ல் திருப்புவனம் போலீசார் விசாரித்தனர். தனிப்படை போலீசார் தாக்கியதில் அவர் இறந்தார்.

போலீஸ்காரர்கள் கண்ணன், பிரபு, ஆனந்த், ராஜா, சங்கரமணி கண்டன் கைதாகினர். சி.பி.ஐ., போலீசார் விசாரிக்கின்றனர். கண்ணன் உட்பட ஐந்து போலீசாரை காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரி, மதுரை நீதிமன்றத்தில் சி.பி.ஐ., தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதி செல்வபாண்டி விசாரித்தார். ஐந்து பேரும் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை விசாரிக்க அனுமதித்த நீதிபதி, இன்று மாலை அவர்களை ஆஜர்படுத்த உத்தரவிட்டார்.

**இந்திய இரயில்வே உணவக மற்றும் சுற்றுலா கார்ப்பரேஷன் லிமிடெட்**
(ஓர் இந்திய அரசு நிறுவனம் – நவ ரத்னா)
CIN : L74899DL19999GOI101707

மின்– ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு : குழுப்பொது மேலாளர் / தெற்கு மண்டலம் (GGM / SZ) அவர்கள், தெற்கு இரயில்வேயில் உள்ள இரயில் நிலையங்களில் உணவகம் (RR), உணவு பிளாசா (FP) மற்றும் துரித உணவகம் (FFU) அமைப்பதற்கு மின்–ஒப்பந்தப்புள்ளியை (இரண்டு ஏல முறை மூலம் அழைக்கிறார்.

| வ. எண். | வகை | மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண். | டெண்டர் விற்பனை | மின்–ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1. | RR-KU | SZ/NIT/RR/2025/02 | 06.08.2025 | 04.09.2025அன்று 15.00 மணி |
| 2. | FP & FFU | SZ/NIT/FP-FFU/2025/03 | 06.08.2025 | 04.09.2025அன்று 15.00 மணி |

ஏலத்தில் பங்கேற்க டெண்டர் ஆவணத்தை <www.tenderwizard.com/IRCTC> இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

மேற்காணும் விளம்பரத்தில் ஏதேனும் திருத்தம் / கூடுதல் தகவல் வெளியிடப்பட்டால், அது IRCTC-ன் <www.irctc.com> இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

इंडियन बैंक Indian Bank
इलाहाबाद ALLAHABAD

**மண்டல அலுவலகம், புதுச்சேரி,**
**நெ. 66/4A, ECR, பாக்குமுடையான்பட்டு,**
**புதுச்சேரி-605008. போன்: 0413-2255112**
E-mail: zopuducherry@indianbank.co.in

எங்கள் செஞ்சி கிளையில் புரபேசனரி அதிகாரியான திரு.வெங்கடேஷ், எஸ்.ஆர். எண் 35663, அவரது அங்கீகரிக்கப்படாத வருகை, முறையற்ற சேவை மற்றும் வேலைக்கு பொருத்தமற்ற தன்மை ஆகியவற்றிற்காக அவரது சேவைகளை 'Discharge Simpliciter' மூலம் ஏன் நிறுத்தக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். 12.10.2023 அன்று பதிவு செய்யப்பட்ட தபால் அவரது கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட்டது. 'முகவரியில் அத்தகைய நபர் இல்லை' என்ற காரணத்துடன் வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. அவர் புதுச்சேரியின் மண்டல அலுவலகத்தில் இருந்து நேரடியாக கடிதத்தை பெற்றுக் கொள்ளலாம்.

கடைசியாக அறியப்பட்ட முகவரியில் விளக்கம் கோரும் அறிவிப்பை வழங்க முடியாததால், இந்த அறிவிப்பு வெளியான ஏழு நாட்களுக்குள், அதாவது 14.08.2025 அன்று அல்லது அதற்கு முன்னர், மேற்கூறிய காரணங்களுக்காக அவரது சேவைகளை ஏன் 'Discharge Simpliciter' மூலம் நிறுத்தக்கூடாது என்பதற்கான காரணம் கோரும் அறிவிப்புக்கு பதிலளிக்க மேலும் ஒரு வாய்ப்பை வழங்கி, இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. பதிலளிக்க தவறும் பட்சத்தில் மறு அறிவிப்பு வழங்காமல் உடனடியாக துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இடம்: புதுச்சேரி, தேதி: 05.08.2025 — மண்டல மேலாளர்

பூம்புகார் Poompuhar Hand in hand with our artisans...
भारतीय indian handicrafts हस्तशिल्प continuing tradition

DISTRICT LEVEL
**GANDHI SHILP BAZAAR**
(An Exclusive Exhibition-cum-Sale of Handicrafts and Handlooms)



Venue : URBAN HAAT
ECR, Mamallapuram
(Near TTDC IndianOil Petrol Bunk)
LAST 2 DAYS
Contact: 044 28521325 / 28525094 / +91 9790570341
Period : 01.08.2025 to 07.08.2025
10.00 a.m. to 08.00 p.m. (Including Sundays)

Organised by:
The Tamil Nadu Handifrafts Development Corporation Ltd.,
(A Govt. of Tamil Nadu Undetaking)
Poompuhar Sales Showroom, Mamallapuram

Sponsored by:
Office of the Development Commissioner (Handicrafts)
Ministry of Textiles,
Government of India, New Delhi

Vencobb
Vencobb No.1 Tastiest Chicken
வென்காப் சிக்கன்
நேற்றைய வேலூர் பண்ணை கொள்முதல் விலை ₹. 90
சராசரி எடை 1.70 க்கு கீழ் உள்ள கோழிகளுக்கு ரூ.3 கூடுதல் விலை
today's Suggested Retail price per Kg
தோலுடன் கறி ₹169
தோல் நீக்கிய கறி ₹182

# கொடி கம்பங்கள் அகற்றம் கோர்ட்டில் அ.தி.மு.க., மனு

**மதுரை, ஆக.6–**

கொடிக் கம்பங்களை அகற்றும் நடவடிக்கைக்கு தடை கோரிய வழக்கில் அ.தி.மு.க.,தரப்பில் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் இடையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

மதுரை பழங்காநத்தம் பைபாஸ் ரோடு ஜெயம் தியேட்டர் எதிரே பஸ் ஸ்டாப்பில் அ.தி.மு.க.,கொடிக் கம்பம் நட அனுமதிக்க உத்தரவிடக்கோரி, அதன் நிர்வாகி கதிரவன் மனு தாக்கல் செய்தார்.

இதை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.கே.இளந்திரையன், 'தேசிய, மாநில நெடுஞ்சாலைகள், அரசின் பிற துறைகளுக்கு சொந்தமான பொது இடங்களில் உள்ள அரசியல் கட்சிகள், ஜாதி, மதம் சார்ந்த அமைப்புகளின் கொடிக் கம்பங்களை அகற்ற வேண்டும். அதனால், மனுவை ஏற்க முடியாது; தள்ளுபடி செய்யப்படுகிறது' என உத்தரவிட்டார்.

'மார்க்சிஸ்ட் கொடிக் கம்பங்களை அகற்றும் அரசின் நடவடிக்கைக்கு தடை விதிக்க வேண்டும்,' என அதன் மாநில செயலர் சண்முகம் மனு தாக்கல் செய்தார்.

மார்க்சிஸ்ட் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிபதி சி.சரவணன் விசாரித்து, தள்ளுபடி செய்தார். இதை எதிர்த்து சண்முகம் மேல்முறையீடு செய்துள்ளார்.

ஜூலை 22ல், கொடி கம்பம் தொடர்பான வழக்குகளை விசாரித்த 3 நீதிபதிகள் அமர்வு, 'விருப்பமுள்ள கட்சிகள் விளக்கமளிக்கும் வகையில், இவ்வழக்கில் தங்களையும் ஒரு தரப்பாக இணைத்துக் கொள்ள இடையீட்டு மனுக்களை ஆக.5க்குள் தாக்கல் செய்யலாம்.

கொடிக் கம்பங்களை அகற்றும் நடவடிக்கையை பொறுத்தவரை, தற்போதைய நிலை தொடர வேண்டும்,' என உத்தரவிட்டு, வழக்கை ஆக. 6க்கு ஒத்தி வைத்தனர்.

இதையடுத்து, அ.தி.மு.க.,சார்பில் முன்னாள் அமைச்சர் உதயகுமார், இடையீட்டு மனு தாக்கல் செய்தார். அதில், 'இவ்வழக்கில் எங்கள் கட்சியையும் ஒரு தரப்பாக இணைத்துக் கொள்ள வேண்டும். எங்கள் தரப்பு நிலைப்பாட்டை தெரிவிக்க வாய்ப்பளிக்க வேண்டும்,' என கூறியுள்ளார்.

ஹெல்மெட் அணிவீர்

# கரூர் மாவட்ட அ.தி.மு.க., நிர்வாகி நீக்கம்

**சென்னை, ஆக. 6–**

கரூர் மாவட்ட அ.தி.மு.க., விவசாயப் பிரிவு செயலர் பாலமுருகன், கட்சியிலிருந்து நீக்கப்படுவதாக, அக்கட்சியின் பொதுச்செயலர் பழனிசாமி அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை:

கரூர் மாவட்ட அ.தி.மு.க., விவசாயப் பிரிவு செயலர் பாலமுருகன், கட்சியின் கொள்கை, குறிக்கோளுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டுள்ளார். கட்சி கட்டுப்பாட்டை மீறி, கட்சிக்கு களங்கமும், அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்டுள்ளார். இந்த காரணத்தினால், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவி உட்பட அனைத்து பதவிகளிலிருந்தும், அவர் நீக்கி வைக்கப்படுகிறார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION**
Poonamalee High Road, Chennai Metro Rail Limited (CMRL)Admin Building, Koyambedu, Chennai-600 107. Ph.No. (044) 26426773 Email id . : tncsc.tn@nic.in
CIN:U15137TN1972SGC006157

BS6/051115/2025 — **SHORT E-TENDER NOTICE** — Date:05.08.2025
Short e-Tender No: BS6/051115/2025 - TNCSC/25-26

Tamil Nadu Civil Supplies Corporation invites online electronic tender for the Purchase of **"60,000 Metric Tonnes of Tur dal (Split- Husked &Fatka)[Indigenous]/Tur Dal (Split Husked-Imported)/ Lentil locally known as Canadian Yellow Lentil (Split – Husked & Laired No.2) / Lentil locally known as Canadian Yellow Lentil (Whole – Husked & Laired No.2) for three months of October-2025, November-2025 and December-2025 as per AGMARK specifications"**

Complete Short e-tender document can be viewed and downloaded from **https:tntenders.gov.in/nicgep/app**

The bidders have to participate only through online bidding with Digital Signature Certificate (DSC) of Class-II or Class-III

Last Date and Time for Online Submission: **22.08.2025 up to 11.00 A.M.**

DIPR/4138/TENDER/2025 — **MANAGING DIRECTOR**

தமிழ்நாடு அரசு
**மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒ.அ.எண். 11 / 2025-26 / தவஅ / நாள்: 05.08.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம் அவர்களால் **சி.ஆர்.ஐ.டி.பி பணிகள்-2025-26** தலைப்பின் கீழ் **தேனி, திண்டுக்கல், பழநி மற்றும் மதுரை (நெ) க(ம)ப கோட்டங்கள்** சார்ந்த பணிகளுக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளி **25.09.2025, 11.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **14.08.2025** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம்.**

**செ.ம.தொ.இ /4179 / ஒப்பந்தப்புள்ளி / 2025**

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.18/ 2025-2026/ முவதொஅ / நாள். 31.07.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் **கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம், அவர்களால் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் SASCI – 2025-2026** பணிகளின் கீழ் **செங்கல்பட்டு(நெ)** நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான ஒரு பணிக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **26.08.2025, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **08.08.2025** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர்(நெ)**
**நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம்,**
**செங்கல்பட்டு-1**

செ.ம.தொ.இ./ 4156 /ஒப்பந்தப்புள்ளி/2025

இந்து சமய அறநிலையத்துறை
**அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில்**
பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம் - 601102.
தொலைபேசி : 27927177, கைபேசி : 9444 487 487. மின்னஞ்சல் முகவரி : periyapalayambhavaniamman@gmail.com

**பிரதமை டின் கண்மலர்கள், பல உருவங்கள் பொது ஏல விளம்பர அறிவிப்பு**

இத்திருக்கோயிலின் இருப்பில் உள்ள பிரதமை டின் கண்மலர்கள், பல உருவங்கள் எடை 1450 கிலோ விற்பனை செய்வதற்காக வருகின்ற **11.09.2025** பிற்பகல் **4.00** மணியளவில் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் முன்னிலையில் இத்திருக்கோயில் அலுவலகத்தில் பகிரங்கமாக பொது ஏலம் விடப்படும். ஏலம் கேட்கும் ஒவ்வொருவரும் **ரூ.1,50,000/-** (ரூபாய் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) வைப்புத் தொகையினை, **"அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில், பெரியபாளையம்"** என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் வங்கி வரைவோலை மூலமாக மட்டுமே இத்திருக்கோயிலில் செலுத்தி ஏலம் கேட்கவேண்டும். இதர நிபந்தனைகள் **www.omsribhavaniammantempleperiyapalayam.org** மற்றும் **https://hrce.tn.gov.in/hrcehome/index_temple.php?tid=1642** என்ற வலைத்தளங்களில் பார்வையிட்டும், திருக்கோயில் அலுவலகத்தில் கேட்டும் தெரிந்துக்கொள்ளலாம்.

**து.ரு.பிரகாஷ்** செயல் அலுவலர். — செ.ம.தொ.இ / 889 / வரைகலை / 2025 — **அஞ்சன் லோகமித்ரா** பரம்பரை அறங்காவலர்.

**தமிழ்நாடு அரசு — நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை–28. தொலைபேசி எண் : 044–29864447**
**ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (ந.க.எண்.9999/2025/மா.தி2, நாள்: 01.08.2025)**

1. இயக்கம் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதி (O&M DGF) 2025–26ன் கீழ் தமிழகத்தில் உள்ள 2 மாநகராட்சி மற்றும் 4 நகராட்சிகளில் மொத்தம் 14 எண்ணிக்கையிலான உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. குறைந்த பட்சமாக ஒரு பணியின் மதிப்பு ரூ.21.50 இலட்சம் மற்றும் அதிகபட்சமாக பணியின் மதிப்பு ரூ.200.00 இலட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை **www.tntenders.gov.in** இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** இணையதள முகவரியில் **07.08.2025** முதல் **22.08.2025** வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் **14.08.2025** அன்று காலை **11.00** மணியளவில் சம்மந்தப்பட்ட மாநகராட்சி / நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.
6. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **22.08.2025** அன்று மாலை **03.00** மணிவரையில்.
7. சம்மந்தப்பட்ட மாநகராட்சிகள் / நகராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **22.08.2025** அன்று மாலை **3.30** மணி.
8. ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.

செ.ம.தொ.இ./ 4081 /ஒப்பந்தப்புள்ளி/2025 — **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28**

HYUNDAI

**ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட்**
**CIN - L29309TN1996PLC035377**
**பதிவு அலுவலகம் - பிளாட் எண். H-1, SIPCOT தொழில் பூங்கா, இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம், மாவட்டம், தமிழ்நாடு 602 117**
**வலைதளம்: http://www.hyundai.com/in/;**
**மின்னஞ்சல்: complianceofficer@hmil.net**

ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் ("நிறுவனம்/HMIL")ன் 29-வது **ஆண்டு பொதுக்குழு** (AGM) வரும் 28, ஆகஸ்ட் 28, 2025, வியாழக்கிழமை இந்திய நேரப்படி (IST) பிற்பகல் 02:00 மணிக்கு 05, 2025 அன்று அனுப்பப்பட்ட AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வர்த்தகங்களைப் பரிவர்த்தனை செய்ய வீடியோ கான்ஃபெரன்சிங் ("VC") முறையில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு தொலைநிலை மின்னணு-வாக்களிக்கும் வசதியை வழங்கவும் AGM-ல் அதன் உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்கவும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)-ன் சேவைகளை ஈடுபடுத்தியுள்ளது.

நிறுவனங்கள் சட்டம், 2013 ('சட்டம்'), SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 ('SEBI LODR'), கார்ப்பரேட் விவகார அமைச்சகம் மற்றும் SEBI (ஒட்டுமொத்தமாக 'சுற்றறிக்கைகள்' என்று குறிப்பிடப்படுகிறது) ஆகியவற்றால் வெளியிடப்பட்ட பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்கள், சுற்றறிக்கைகள் போன்றவற்றின் விதிகளுக்கு இணங்க, 2024-25 நிதியாண்டுக்கான வருடாந்திர நிதிநிலை அறிக்கைகளை உள்ளடக்கிய அறிவிப்பு மற்றும் 2024-25 நிதியாண்டுக்கான ஆண்டறிக்கை, ஆகஸ்ட் 01, 2025 வெள்ளிக்கிழமை நிலவரப்படி டெப்பாசிட்டரிகளிடமிருந்து பெறப்பட்ட உறுப்பினர்கள்/பயன் பெறும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர்கள் உள்ள அனைத்து உறுப்பினர்கள்/பயன் பெறும் உரிமையாளர்களுக்கும் மின்னணு முறையில் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது. அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கையை உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் மின்னணு முறையில் அனுப்பும் பணி செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 05, 2025 அன்று நிறைவடைந்தது. அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கை நிறுவனத்தின் வலைத்தளமான https://www.hyundai.com/in/en/investor-relations/financial-information/annual-report-லும், நிறுவனத்தின் பங்குப்பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகளின் வலைத்தளமான அதாவது நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியாவின் www.nseindia.com மற்றும் BSE லிமிடெட்டின் www.bseindia.com-லும், KFin-ன் வலைத்தளமான https://evoting.kfintech.com/public/Downloads.aspx-லும், NSDL-ன் www.evoting.nsdl.com-லும் கிடைக்கிறது.

பதிவுகளில் மின்னஞ்சல் முகவரிகள் புதுப்பிக்கப்படாத உறுப்பினர்களுக்கு நிறுவனம் நேரடித் தகவல்தொடர்பையும் அனுப்பியுள்ளது. அறிவிப்பு, ஆண்டு அறிக்கை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை அணுக நிறுவனத்தின் வலைத்தளத்தின் சரியான இணைப்பு இதில் உள்ளது.

**மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்தல்:**

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின்படி, அனைத்து பௌதீக பங்குதாரர்களும் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான Kfin டெக்னாலஜீஸ் லிமிடெட் ("RTA" அல்லது "Kfin") இடம் தேவையான படிவம் ISR-1 ஐ சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் மின்னஞ்சல் முகவரி விவரங்கள் உட்பட தங்கள் தொடர்பு விவரங்களைப் புதுப்பிக்கலாம்/பதிவு செய்யலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. படிவம் ISR-1 ஐ https://ris.kfintech.com/clientservices/isc/isrforms.aspx என்ற முகவரியிலிருந்தும், நிறுவனத்தின் வலைத்தளமான https://www.hyundai.com/in/en/investor-relations/investor-information/disclosure என்ற முகவரியிலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம். மேலும் இது தொடர்பான விரிவான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை https://ris.kfintech.com/faq.html என்ற முகவரியில் காணலாம்.

டிமெட்டீரியலைஸ் செய்யப்பட்ட வடிவத்தில் ஈக்விட்டி பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை அவர்களின் தொடர்புடைய டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்யுமாறு/புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மின்னணு வாக்களிப்புக்கான பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறுதல்:**

நிறுவனம், AGM-ல் பரிவர்த்தனை செய்யப்படும் வணிகங்கள் தொடர்பாக, தொலைநிலை மின்னணு வாக்களிப்பு மற்றும் AGM-ல் மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறது. அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்கள் வருடாந்திர பொதுக் வாக்களிப்பு மூலம் மட்டுமே பரிவர்த்தனை செய்யப்படும்.

**AGM-க்கு முந்தைய தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு காலம் ஆகஸ்ட் 23, 2025 சனிக்கிழமை காலை 9:00 மணிக்கு (IST) தொடங்கி ஆகஸ்ட் 27, 2025 புதன்கிழமை மாலை 05:00 மணி (IST)** வரை திறந்திருக்கும். மேற்கூறிய தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது, மேலும் மேற்கூறிய காலம் காலாவதியானவுடன் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு வசதி NSDL-னால் உடனடியாக முடக்கப்படும். உறுப்பினர் ஒரு தீர்மானத்தின்மீது வாக்களித்த பின்னர், அதை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

AGM-க்கு முன்னர் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்காத உறுப்பினர்கள் AGM-ல் VC வழியாக கலந்து கொண்டு மின்னணு வாக்களிப்பினை செய்யலாம். இருப்பினும், தொலைநிலை மின்னணு வாக்களிப்பு அல்லது AGM-ல் மின்னணு வாக்களிப்பு என்ற இரு வழிகளில் ஒரு வாக்களிக்கும் முறையை மட்டுமே உறுப்பினர்கள் தேர்வு செய்ய முடியும். தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்களும் AGM-ல் கலந்து கொள்ளலாம், ஆனால் மீண்டும் AGM-ல் வாக்களிக்க முடியாது.

இந்த AGM-கான வாக்களிக்கும் உரிமைகளைக் கணக்கிடுவதற்கான கட்ஆஃப் தேதி வியாழக்கிழமை, ஆகஸ்ட் 21, 2025 ("கட்ஆஃப் தேதி") ஆகும். அதன்படி, கட்ஆஃப் தேதியின்படி உறுப்பினர் பதிவேட்டிலோ அல்லது டெப்பாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயன் பெறும் உரிமையாளர்களின் பதிவேட்டிலோ பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மட்டுமே (நிறுவனம் அல்லது DP-களிடம் தங்கள் மின்னஞ்சல் ஐடியைப் பதிவு செய்யாததால் இந்த அறிவிப்பைப் பெறாத உறுப்பினர்கள் அல்லது AGM அறிவிப்பு அனுப்பப்பட்ட நேரத்தில் நிறுவனத்தின் பங்குதாரராக இல்லாத உறுப்பினர்கள் உட்பட) AGM-ல் தொலைநிலை மின்னணு வாக்களிப்பு/மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்க உரிமை பெறுவார்கள். கட்ஆஃப் தேதியின்படி உறுப்பினர்/பயன் பெறும் உரிமையாளராக இல்லாத நபர், இந்த அறிவிப்பை தகவல் நோக்கத்திற்காக மட்டுமே கருத வேண்டும்.

மின்னணு வாக்களிப்புக்கான விரிவான வழிமுறைகள், AGM-ல் சேருவதற்கான நடைமுறை ஆகியவை AGM அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன, மேலும் இதை நிறுவனத்தின் வலைதளங்களான https://www.hyundai.com/in/en/investor-relations/financial-information/annual-report, Kfin-ன் வலைதளமான https://evoting.kfintech.com/public/Downloads.aspx, www.evoting.nsdl.com, மற்றும் பங்குச் சந்தை வலைதளங்களான www.nseindia.com மற்றும் www.bseindia.com ஆகியவற்றிலும் கிடைக்கும்.

அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு பங்குகளை நேரடியாக வைத்திருக்கும் எந்தவொரு நபரும், கட்ஆஃப் தேதியின்படி பங்குகளை வைத்திருக்கும் தனிநபர் அல்லாதவரும், மின்னணு வாக்களிப்புக்கான புகுபதிவு ஐடி மற்றும் கடவுச்சொல்லை evoting@nsdl.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் பெறலாம். இருப்பினும், ஒரு உறுப்பினர் ஏற்கனவே NSDL-ல் மின்னணு வாக்குப்பதிவுக்காகப் பதிவு செய்திருந்தால், அவர் ஏற்கனவே உள்ள உள்நுழைவு ஐடிஐ பயன்படுத்தி வாக்களிக்கலாம். டிமேட் முறையில் பங்குப் பத்திரங்களை வைத்திருக்கும் பங்குதாரர்கள், அறிவிப்பை அனுப்பிய பிறகு நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்ஆஃப் தேதியன்று பங்குகளை வைத்திருந்தால், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

2024-25 நிதியாண்டிற்கான இறுதி டிவிடெண்ட் தொகைக்கான உறுப்பினர்களின் உரிமையை நிர்ணயிப்பதற்கான பதிவு தேதி செவ்வாய், ஆகஸ்ட் 05, 2025 ஆகும். AGM-ல் உறுப்பினர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டு, உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் டிவிடெண்ட் தொகை வழங்கப்படும்.

நிதிச் சட்டம் 2020 மூலம் திருத்தப்பட்ட வருமான வரிச் சட்டம், 1961-ன்படி, ஏப்ரல் 01, 2020 அன்று அல்லது அதற்குப் பிறகு நிறுவனத்தால் செலுத்தப்பட்ட அல்லது விநியோகிக்கப்படும் டிவிடெண்ட் தொகை உறுப்பினர்களால் செலுத்தப்பட வேண்டிய வரிக்கு உட்பட்டதாக இருக்கும். எனவே, குறிப்பிட்ட டிவிடெண்ட் தொகையை செலுத்தும் போது நிறுவனம் மூலத்தில் வரியை கழிக்க (TDS) வேண்டும். இது தொடர்பாக நிறுவனம் அனுப்பிய தனி மின்னஞ்சல் தொடர்பை உறுப்பினர்கள் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வாக்களிப்பின் முடிவுகள், AGM முடிவடைந்த இரண்டு வேலை நாட்களுக்குள் அல்லது பொருந்தக்கூடிய சட்டம்(கள்)ன் கீழ் விவரிக்கப்பட்டுள்ள வேறு எந்த ஒரு காலக்கெடுவிற்குள்ளும் அறிவிக்கப்படும். வாக்களிப்பு முடிவுகள் ஒரே நேரத்தில் பங்குச் சந்தைகளுக்கும் அதாவது, NSE மற்றும் BSE ஆகியவற்றுக்கும் தெரிவிக்கப்படும். வாக்களிப்பு முடிவுகள் மற்றும் ஸ்க்ரூடினைசர் அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் வலைத்தளமான https://www.hyundai.com/in/en/hyundai-story/announcements-2025.2026-ல் கிடைக்கும், மேலும் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்படும்.

ஏதேனும் கேள்விகள் இருந்தால், பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் www.evoting.nsdl.com ன் பதிவிறக்கப் பிரிவில் உள்ள பங்குதாரர்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு பயனர் கையேட்டைப் பார்க்கவும் அல்லது 022-4886 7000 மற்றும் 022-2499 7000 என்ற எண்களில் தொடர்புகொள்ளவும் அல்லது evoting@nsdl.com என்ற மின்னஞ்சல் முகவரியில் NSDL அதிகாரியான திரு. கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு உங்களுடைய கோரிக்கையை அனுப்பவும்.

**ஹூண்டாய் மோட்டார் இன்டியா லிமிடெடுக்காக**
**கையொப்பம்**
**பிரதீப் சூக்**
**நிறுவனச் செயலர் மற்றும் இணக்க அதிகாரி**

**தேதி: ஆகஸ்ட் 06, 2025**
**இடம் : குருகிராம்**

# Firms santioned by US over Iran oil mostly Mumbai based

- Unlisted entities linked to shipping empire of Khamenei advisor's son

NESIL STANEY
Mumbai, August 5

**THE SIX INDIAN** entities which the US State Department and the Office of Foreign Assets Control (OFAC) has sanctioned for trading in Iranian oil, petroleum products & petrochemicals are small and mid-sized unlisted entities, five of them registered in Mumbai and one in Chennai. These entities are linked to the shipping empire of Mohammad Hossein Shamkhani, son of Ali Shamkhani, top political advisor to supreme leader of Iran Ayatollah Ali Khamenei.

These Mumbai-based companies include Alchemical Solutions, Ramniklal S Gosalia, Jupiter Dyechem, Global Industrial Chemicals and Persistent Petrochem while Kanchan Polymers is based in Chennai.

Alchemical Solutions, founded in March 23, 2021, has its registered office in Bandra Kurla Complex (BKC) and two directors -- Shraddha Talloo and Jerome Cruz -- as per filings. Talloo is associated with multiple companies, including G B Farms, Think Crete, RMC, Alchemical Solutions, Chemform Trading and Persistent Petrochem, two of which are in the sanctioned-list.

Ramniklal S Gosalia is in business for the last seven decades and a distributor of Bharat Petroleum.

"We aspire to be a billion-dollar company by the year 2028," its website said.

Jupiter Dyechem, founded in 1968, is part of Chokhani Group and employs 85 people in 8 offices across India.

None of these firms are large public enterprises. However, they play vital roles in India's chemical and manufacturing supply chains.

The US sanctions are part of a broader crackdown on entities linked with Iran. The sanctions block operations requiring dollar settlements, international shipping, trade finance, and access to Western insurance and banking.


## CONTAINER CORPORATION OF INDIA LTD.

(A NAVRATNA UNDERTAKING OF GOVT. OF INDIA)
Regd. Office & Investors Relation Centre: CONCOR Bhawan, C-3, Mathura Road, Opp. Apollo Hospital, New Delhi – 110076.
CIN : L63011DL1988GOI030915
E-mail : investorrelations@concorindia.com
Tel. Nos. : 41673093-96, 41222500/600/700 | Website : http://www.concorindia.co.in

**NOTICE OF RECORD DATE FOR INTERIM DIVIDEND FOR FY 2025-26**

Notice is hereby given that **13th August, 2025** (Wednesday) has been fixed as the Record Date for the purpose of determining the entitlement of members to Interim Dividend @32% (Rs.1.60 per share on equity share of Rs.5/- each), declared by the Board in its meeting held on **05.08.2025** for the financial year 2025-26. Further, Interim dividend will be paid:
(i) to those Members whose names will appear in the Register of Members of the Company, after giving effect to all valid Share Transfers in physical form lodged with the Company and its Registrar on or before **13th August, 2025;** or
(ii) in respect of Shares held in electronic form, to those "deemed members" whose names appear on the Statements of beneficial ownership furnished by National Securities Depository Limited (NSDL) and Central Depository Services (India) Limited (CDSL), at the end of business hours on **13th August, 2025.**
In order to avail the facility of payment of dividend through Electronic Clearing Service (ECS), members of the Company, holding their shares in Demat mode are requested to submit the duly filled in ECS mandate form to their Depository Participant and those holding physical shares to Company's Share Transfer Agent and Registrar: M/s Beetal Financial & Computer Services (P) Ltd., BEETAL HOUSE, 3rd Floor, 99, Madangir, Behind Local Shopping Centre, Near Dada Harsukhdas Mandir, New Delhi – 110062. ECS instructions once furnished by the member will supersede all his/ her previous bank mandates/details. ECS mandate form is available on Company's website: www.concorindia.co.in.
Shareholders holding shares in dematerialized mode are requested to update their records such as tax residential status, and permanent account number (PAN), mobile numbers and other details with the relevant depositories through their depository participants. Shareholders holding shares in physical mode are requested to furnish details to the Company's Registrar and Share Transfer Agent, M/s Beetal Financial & Computer Services (P) Ltd. at concor@beetalfinancial.com.
Shareholders are also requested to register/ update their E-mail ID with company at investorrelations@concorindia.com/ their Depository participants/ Company's Registrar & Share Transfer Agent at concor@beetalfinancial.com which will be used for sending official documents through e-mail in future.
Shareholders are requested to claim their unpaid/ unclaimed dividend, if any by writing to company at its Registered office or email or to its R&TA. Dividends if remained unpaid or unclaimed for a period of seven years shall be transferred by the company to the Investor Education and Protection Fund. Further, all shares in respect of which dividend has not been paid or claimed for seven consecutive years or more shall be transferred by the company in the name of Investor Education and Protection Fund.

For Container Corporation of India Ltd.
sd/-
(Harish Chandra)
PED (Finance) & Company Secretary and Chief Financial Officer

**Place:** New Delhi
**Date :** 05.08.2025



pfrda | nps national pension system | #Zaruri Hai

## PENSION FUND REGULATORY AND DEVELOPMENT AUTHORITY

***INFORMATION TO MEMBERS OF APPROVED SUPERANNUATION FUNDS TO JOIN NATIONAL PENSION SYSTEM***

The Pension Fund Regulatory and Development Authority (PFRDA) is a statutory Authority established under PFRDA Act, 2013, for the purpose of promoting old age income security through pension schemes regulated under the said Act, including the National Pension System (NPS).

NPS is a defined contributory pension scheme and was initially introduced in 2004 for the employees of Central Government, Central Autonomous Bodies, State Governments, State Autonomous Bodies. The Scheme was later extended to the employees of Corporates, and Indian citizens on a voluntary basis.

The provisions of Income Tax Act, 1961 provides various Tax benefits under NPS. At superannuation, it allows withdrawal of upto 60% of accumulated pension wealth as tax free lump-sum amount while the remaining amount is used to purchase annuity from the Annuity Service Provider(s) on which Goods and Services Tax (GST) is exempted. NPS over the years has consistently generated higher returns to the subscribers through investment of corpus by registered pension funds, in various asset classes as per approved investment guidelines for different sectors, bearing in mind the risk and return perspective.

All activities under NPS are regulated under the PFRDA Act, 2013 and the regulations notified by the Authority. Further, activities under NPS are fully digital and managed in a transparent manner with updated information on individual pension corpus available to subscriber on a daily basis using mobile apps or subscriber's login. Subscribers also have flexibility to choose from multiple pension funds, asset allocation and portability across employments, locations and employment status upto the age of 75 years.

By means of this Notice, members of various Approved Superannuation Funds registered under the Income Tax Act, 1961 are informed that they can avail benefits and returns under NPS, for which purpose they may contact their respective Approved Superannuation Trust/ employer to enable migration to NPS. As per provisions of the Income Tax Act, 1961, exemption from taxation is available in case of one-time transfer of funds from Approved Superannuation Funds to NPS. The Authority shall provide necessary support and guidance to the Approved Superannuation Funds to facilitate migration of its members into NPS, to fulfil its mandate of a secured pensioned society.

The Approved Superannuation Funds or its individual members, as the case may be, may undertake transfer into NPS in line with the detailed procedure mentioned on the Authority's website (www.pfrda.org.in) under the tab "Superannuation Funds" or by scanning the QR code provided below. Further, any query in this regard may be sent to saf-information@pfrda.org.in or to the office of the Authority.

***Chief General Manager***
*For and on behalf of*
*Pension Fund Regulatory and Development Authority*



HYUNDAI

## Hyundai Motor India Limited

CIN - L29309TN1996PLC035377
Registered Office - Plot No H-1, SIPCOT Industrial Park, Irrungattukottai Sriperumbudur Taluk, Kancheepuram District, Tamil Nadu 602 117
Website: https://www.hyundai.com/in;
Email ID: complianceofficer@hmil.net

Notice is hereby given that **29th Annual General Meeting** ('AGM') of Hyundai Motor India Limited ('the Company') will be held on Thursday, August 28, 2025 at 02:00 P.M. (IST) through Video Conferencing ('VC') to transact the businesses as set forth in the Notice of the AGM sent on August 05, 2025 ('Notice'). The Company has engaged National Securities Depositories Limited (NSDL) to provide facility of remote e-voting and e-voting at the AGM to its members (together referred to as 'e-voting').

In compliance with the provisions of the Companies Act, 2013 ('Act'), SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ('SEBI LODR'), applicable guidelines, circulars etc. issued by the Ministry of Corporate Affairs and SEBI (collectively referred to as 'Circulars), the Notice along with Annual Report for FY 2024-25 covering Annual Financial Statements for the financial year 2024-25, have been sent in electronic mode only, to all those members/ beneficial owners whose names are appearing in the register of members/beneficial owners received from depositories as on Friday, August 01, 2025. The electronic dispatch of the Notice and Annual Report to the members through email has been completed on Tuesday, August 05, 2025. The Notice and Annual Report is also available on the website of the Company at https://www.hyundai.com/in/en/investor-relations/financial-information/annual-report, on the website of the Stock Exchanges where the equity shares of the Company are listed, i.e., National Stock Exchange of India Limited at www.nseindia.com and BSE Limited at www.bseindia.com and on the website of KFin at https://evoting.kfintech.com/public/Downloads.aspx and NSDL at www.evoting.nsdl.com.

The Company has also sent physical communication to the members whose email addresses are not updated in the records, which contains the exact link of the Company's website to access the Notice and Annual Report and other relevant documents.

**Registration of E-mail address:**

Members holding shares in physical mode are hereby notified that pursuant to applicable Circulars, all holders of physical shares can update/register their contact details including the details of e-mail address by submitting the requisite Form ISR-1 with Company's registrar and share transfer agent i.e., Kfin Technologies Limited ("RTA" or "Kfin"). Form ISR-1 can also be downloaded at https://ris.kfintech.com/clientservices/isc/isrforms.aspx and on the website of the Company at https://www.hyundai.com/in/en/investor-relations/investor-information/disclosure and detailed FAQs in this regard can be found at https://ris.kfintech.com/faq.html.

Members holding equity shares in dematerialized form are requested to register/update their email addresses with their relevant depository participants.

**Obtaining USER ID and password for e-voting:**

The Company is pleased to provide remote e-voting and e-voting facility at the AGM to its members in respect of the business(es) to be transacted at the AGM. The resolutions set forth in the Notice will be transacted only through e-voting.

The **remote e-voting period prior to AGM** will **commence at 9:00 A.M. (IST)** on **Saturday, August 23, 2025** and will remain open till **05:00 P.M. (IST)** on **Wednesday, August 27, 2025.** The remote e-voting will not be allowed beyond the aforesaid date & time and the remote e-voting module shall be forthwith disabled by NSDL upon expiry of aforesaid period. Once the vote on the resolution is casted by the member, he/she shall not be allowed to change it subsequently.

The members attending the AGM through VC who would have not casted their vote by remote e-voting, shall be entitled to vote through e-voting at the AGM. However, the members can opt for only one mode of voting i.e. either remote e-voting or e-voting at the AGM. The members who cast their vote by remote e-voting may also attend the AGM but will not be able to vote again at the AGM.

The cut-off date for the purpose of reckoning the voting rights for this AGM will be Thursday, August 21, 2025 ("Cut-off date"). Accordingly, only those members whose names are recorded in the Register of Members or in the Register of Beneficial Owners maintained by the depositories as on Cut-off date (including those members who may not have received this Notice due to non-registration of their email ID with the Company or DPs or had not been a shareholder of the Company at the time of dispatching of AGM Notice) shall be entitled to vote by way of remote e-voting/e-voting at AGM. The person who is not a Member/Beneficial Owner as on the Cut-off date, should treat this Notice for information purpose only.

Detailed instructions for e-voting, procedure to join the AGM, are provided in the Notice of the AGM and the same can also be accessed on the websites of the Company at https://www.hyundai.com/in/en/investor-relations/financial-information/annual-report, Kfin at https://evoting.kfintech.com/public/Downloads.aspx NSDL at www.evoting.nsdl.com and the Stock Exchanges at www.nseindia.com and www.bseindia.com.

Any person holding shares in physical form and a non-individual who acquires the equity shares after the Notice is dispatched and holds equity shares as on the Cut-off date, may obtain the login ID and password for e-voting by sending a request at evoting@nsdl.com. However, if a member is already registered with NSDL for e-voting, he/she may use the existing login credential ID to cast the vote. In case of shareholders holding securities in demat mode, who acquire shares of the Company and becomes a Member of the Company after sending the Notice and holding shares as on the cut-off date may follow steps mentioned in the Notice.

The Record Date for determining the entitlement of members of final dividend for the financial year 2024-25 is Tuesday, August 05, 2025. The dividend, subject to the approval of the members at the AGM, will be paid within 30 days from the date of approval of members.

As per the Income-tax Act, 1961, as amended by the Finance Act 2020, dividend paid or distributed by the Company as on or after April 01, 2020 shall be taxable in the hands of the members. The Company shall therefore be required to deduct tax at source (TDS) at the time of making payment of the said dividend. The members are requested to refer to separate e-mail communication sent by the Company in this regard.

The voting results will be announced within two working days from the conclusion of the AGM or any other timeline as described under applicable law(s). The voting results shall simultaneously be communicated to the Stock Exchanges viz. NSE and BSE. The voting results along with scrutinizer report shall be available on the website of the Company at https://www.hyundai.com/in/en/hyundai-story/announcements-2025-2026 and shall also be displayed at the registered office of the Company.

In case of any queries, you may have refer to the Frequently Asked Questions (FAQs) section for shareholders and e-voting user manual available in the "Download" section of www.evoting.nsdl.com or Members who need assistance before or during the AGM can contact NSDL at 022-4886 7000 or send a request to NSDL official Mr. Gopalakrishnan at evoting@nsdl.com.

For Hyundai Motor India Limited
Sd/-
Pradeep Chugh
Company Secretary & Compliance Officer

Date: August 06, 2025
Place: Gurugram



ADVERTORIAL

## Lord's Mark Industries Ltd to go Public on BSE, Eyes NSE Listing and Global Expansion




**Lord's Mark Industries Limited**, a prominent and rapidly growing Indian conglomerate with business interests spanning healthcare, diagnostics, renewable energy, and cutting-edge technology, is poised to make its mark on the capital markets with an upcoming listing on the Bombay Stock Exchange (BSE). This milestone move reflects the company's strategic ambition to elevate its presence, not just within India, but across global business landscapes.

This listing follows the company's recent National Company Law Tribunal (NCLT) clearance for the merger with Lord's Mark India Ltd (formerly Kratos Energy and Infrastructure Ltd) — a significant development that is reshaping the group's business trajectory. The merger is designed to unlock operational efficiencies, enabling greater resource optimisation, streamlined management, and robust expansion into new verticals.

**Beneficial Share Swap for Investors** - As part of the merger structure, shareholders of Lord's Mark Industries Ltd will be entitled to a share swap ratio of 1:1.25. For every share held in Lord's Mark Industries Ltd, investors will receive 1.25 shares in the newly consolidated Lord's Mark India Ltd. This favourable ratio underscores the company's commitment to creating value for its shareholders and supports the vision of building a stronger, more dynamic corporate entity.

**Strong Global Investor Backing and Strategic Partnerships** The announcement of the BSE listing has also been accompanied by significant interest from international investors, demonstrating robust confidence in Lord's Mark Industries' diversified business approach, resilience, and forward-looking strategies. Notably, the company has received a high-value proposal for a global partnership concerning its Medtech product line — a flagship portfolio in the green energy segment. This partnership is poised to accelerate the company's international reach and solidify its standing as a key player in the renewable energy market.

**Capital Market Journey: BSE Launch, NSE on the Horizon** - The BSE listing serves as the launchpad for Lord's Mark Industries' wider capital market journey. With eyes set on further growth, the company has initiated plans to pursue a listing on the National Stock Exchange (NSE) within the next six months. This dual-exchange presence is anticipated to boost stock liquidity, expand the investor base, and enhance visibility among both domestic and foreign institutional investors. The NSE listing will also offer better price discovery and increased access to capital — factors that are crucial for the company's future growth plans.

Scan to know more about us



**23.86%** YoY **156.58** Crores Q1 FY26 TOTAL INCOME

**28.27%** YoY **92.92** Crores Q1 FY26 GROSS PROFIT

**97.62%** YoY **54.56** Crores Q1 FY26 EBITDA

## Veranda

## VERANDA LEARNING SOLUTIONS LIMITED

CIN:L74999TN2018PLC125880
REGD OFF: G.R. Complex First floor No.807- 808, Anna Salai, Nandanam, Chennai -600035

**EXTRACT OF CONSOLIDATED UN-AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30TH JUNE 2025**

| Sr. No | PARTICULARS | CONSOLIDATED (INR LAKHS) | | |
|---|---|---|---|---|
| | | Quarter Ended 30-Jun-25 (Unaudited) | Year Ended 31-Mar-25 (Audited) | Quarter Ended 30-Jun-24 (Unaudited) |
| 1 | Total Income from Operations | 15,658.43 | 51,826.81 | 12,642.05 |
| 2 | Net Profit/(Loss) before Tax and Exceptional Items | 778.63 | -25,458.67 | -2,611.30 |
| 3 | Net Profit/(Loss) before Tax and after Exceptional Items | 778.63 | -25,458.67 | -2,611.30 |
| 4 | Net Profit/(Loss) after Tax | 596.51 | -25,165.04 | -2,625.28 |
| 5 | Total Comprehensive Income for the period (Comprising Profit/(Loss) for the period (after tax) and Other Comprehensive Income (aftertax)) | 603.84 | -25,183.06 | -2,619.88 |
| 6 | Equity Share Capital | **7,439.62** | **7,439.62** | **7,127.35** |
| 7 | Paid -up Equity Share Capital (Face Value of Rs.10/- each) | 10 | 10 | 10 |
| 8 | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet as at 31st March 2025 | | 18,256.26 | |
| 9 | Earnings Per Share (of Rs.10/-each) | | | |
| | Basic | -0.09 | -34.73 | -3.93 |
| | Diluted | -0.09 | -34.73 | -3.93 |

**Note:**

1
1. The above Un-Audited Financial results have been reviewed by the Audit Committee and approved by the Board of directors at their respective meeeting held on August 04, 2025 and August 05, 2025.
2. The complete Un-audited financial results (Standalone & Consolidated) of the Statutory Auditors thereon are available at https://www.verandalearning.com/web/application/-files/7517/5438/5149/Signed_Reg_33_for_quarter_ended_June_302025_2.pdf

The same is accessible through scanning of the Quick Response (QR) code provided below.

For Veranda Learning Solutions Limited
Sd/-
**Kalpathi S Suresh**
**Executive Director Cum Chairman**
**DIN:00526480**

Place: Chennai
Date: August 5, 2025